மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) இது குறித்த தீர்மானத்தை "மூவ்" பண்ணுங்கள்.

4. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை நிறுத்தி வைத்து விட்டு, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவிட்டு, அதற்குப்பின் இந்த விவாதத்தைத் தொடரலாம்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

THIRU K. T. K. TANGAMANI : The House should not be treated like this.

தீர்மானம் என்னவென்றே தெரியவில்லை. என்ன தீர்மானம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நான் முதலிலேயே தீர்மான வடிவில் இதைக் குறிப்பிட்டேன். இப்பொழுது நடைபெறும் இந்த விவாதத்தை நிறுத்திவிட்டு, நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக் கொண்டு, அது நிறைவேறியதற்குப் பிறகு, இந்த விவாதத்தைத் தொடரலாம். பிற்பகல் 1-30 மணி அளவில் அவையை ஒத்திவைத்து, மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடி அலுவல்களைத் தொடரலாம் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிந்து அது நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

(5) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு, 1974ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருவார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று நான் முன்மொழிகின்றேன்.

Dr. H. V. HANDE: Hon. Chairman, the Appropriation Bill involves a sum of about Rs. 50 crores and some of us would like to comment on the Bill. It is a very important Money Bill and so the haste with which this Bill is being rushed through, is not very conducive to the Parliamentary practice. I also want to utilise this opportunity to speak on this Bill. Sir, in this Bill a sum of Rs. 80 lakhs is allotted for handloom workers and unless we are given an opportunity to discuss the Bill, the Parliamentary practice will become meaningless. The consideration of this Bill in this manner is highly objectionable and scandalous........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகள் வந்தபொழுது இந்த அவையிலே எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். இந்த நிதி ஒதுக்க மசோதாவிலே யாரும் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை என்று சொல்லமுடியாது. இப்பொழுது இருக்கிற விவாதத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்ற அடிப்படையிலேதான் அந்த நிதி ஒதுக்க மசோதாவிலே விவாதிக்க வேண்டாமென்று கருத்தைத் தெரிவித்தேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும் அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே இடம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக்குழுவிலே எடுத்த முடிவுப்படி, துணை மானியக் கோரிக்கைகளிலே விரிவாகப் பேசிக்கொள்ளலாம் என்றும், நிதி ஒதுக்கீடு மசோதாவிலே விரிவாகப் பேசுவதில்லை என்றுதான் முடிவு எடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு வரப்போகிற துணை பட்ஜெட்டிலே மாத்திரம் விரிவாகப் பேசிக் கொள்ளலாம் என்ற வகையிலேதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

Dr. H. V. HANDE: Sir, on a point of order. In the Legislative Council Money Bills are being discussed at length though they have not got the same rights as the Legislative Assembly has over the Money Bills........

அங்கே விரிவாகப் பேசப்படுகிறது. இங்கே அப்படி இல்லை.

For the last one or two years this is happening. The Legislative Assembly is not discussing the Appropriation Bill or other Money Bills at length.

ஆகவே அது அப்ஜக்ஷனபிள் ஆக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட மரபைக்கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.எ.சி.யிலே முடிவு சொல்லட்டும் whatever is decided in the Business Advisory Committee we are going to accept it லெஜிஸ்லேடிவ் கவுன்சிலிலே தான் விரிவாகப் பேசப் படுகிறது. அசெம்பிளியிலே விரிவாகப் பேசப்படவில்லை பேசவிடாமல் தடுக்கப் படுகிறது. அது இந்த மன்றத்தின் பாரம்பரியத்திற்கும் நல்லதல்ல. நான் நீங்கள் என்ன முடிவு சொன்னாலும் கட்டுப்படுகிறேன். இதை என்னுடைய யோசனையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : இங்கேயும் பேசுவதற்கு, விரிவாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே அலுவல் ஆய்வு குழுவில் முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது வாக்கெடுப்பு.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைசட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, அட்டவணை முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் : 12/74) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

2. பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. எ. சுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவராக இருக்கிற புலவர் கோவிந்தன் அவர்கள் மீது கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் வேதனையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து இங்கே விவாதித்துப் பேசுவது என்பது கொஞ்சம் கஷ்டமானதுதான். இருந்தபோதிலும் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு இங்கே சபாநாயகருக்கு உரிய அந்தப் பதவிக்கான இலக்கணப்படி அந்தப் பதவியில் இருப்பவர் நடக்க வேண்டுமென்ற அக்கறையின் காரணத்தினாலும் ஆர்வத்தின் காரணத்தினாலும் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.